**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 06.08.2024

வா.சா.2 திரு.ராமநாதன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில்

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஏற்கனவே OS No. 31/2010 ல் 8 ம் பிரதிவாதியாக இருந்துள்ளேன். அந்த வழக்கினை நான் நடத்தவில்லை. கடந்த 29.11.1948 ம் வருடத்திற்குண்டான கிரையப்பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் 7 இலக்க சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்துகளை தவிர்த்து மற்ற சொத்திற்கு எவ்வித பிரச்சனை இல்லை. இராமநாடார் 29.11.1948 கிரைய பத்திரம் மூலமாக உலகப்ப நாடாரிடமிருந்து 1 ஏக்கர் 77 செண்ட் நிலம் பெற்றுள்ளார்.ஆனால் அந்த வழக்கானது 38 சென்ட் நிலத்தை குறித்துத்தான் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தனா 38 சென்ட் தவிர மற்ற சொத்துக்கள் யார் வசம் உள்ளது என்றால், திருப்பாலைக்குடி இராஜேந்திரன் வாங்கியிருப்பது தெரியும், மற்ற நபர்கள் யார் வாங்கியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் தாவா சொத்தினை 2 இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

29.11.1948 கிரையப்பத்திரத்தில் சொத்தை அடையாளம் காட்டுவதற்காக பைமாஸ் எண் சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியாது. தாவா 1,2 இலக்க சொத்திற்குண்டான மொத்த சொத்தும் எல்லா பக்கமும் உலகப்பநடாருக்கு பாத்தியப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு சர்வே எப்பொழுது கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

இராமநாடார் கிரையம் பெற்ற சொத்து தாவா சொத்து கிடையாது என்றும், தாவா சொத்திற்கு கிழக்காக உள்ள சொத்து என்றால் அது தவறு. எனது முதல் பிரமாணப்பத்திரிக்கையின் 3வது பாராவில் இராமநாடாரின் வாரிசுகள் பற்றி சொல்லியுள்ளது சரிதான். இராமநாடார் பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய வாரிசுகள் 2008ம் வருடத்தில் பிரித்து கொண்டார்கள். இராமநாடார் வாரிசுகள் பாகப்பிரிவினைசெய்வதற்கு முன்பாகவே அந்த சொத்துக்களுக்கு சர்வே செய்யப்பட்டு சர்வே எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

இராமநாடார் வாரிசுகளுக்கு அவர்களுடைய சொத்து யார் யாருக்கு எந்தெந்த பக்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது குறித்து எழுத்து பூர்வமான ஆவணம் கிடையாது என்றால் சரிதான். நான் சுப்ரமணியன் என்பவரிடமிருந்து பவர் பத்திரம் பெற்று, அந்த பவரின் அடிப்படையில் நான் ராஜேந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு பவர் கொடுத்த சுப்ரமணியனுக்கு தாவா சொத்தில் பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5ற்குண்டான அசல் பத்திரம் யார் வசம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. OS No.31/2010 வழக்கு நடந்த காலக்கட்டத்தில் தாவா சொத்துக்கள் உட்பிரிவு செய்யவில்லை.

1952ம் வருடம் உலகப்பநடார் தன்னுடைய மனைவிக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்துள்ளார். அந்த பாகப்பிரிவினை பத்திரம் குறித்து எனக்குத் தெரியாது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு தான் 1952ம் வருட பாகபிரிவினை பத்திரம் இருப்பது தெரியவந்தது. அசல் வழக்கு எண். 31/2010 ஆனது எந்த சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு நடத்தப்பட்டது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. OS No. 31/2010 வழக்கு நடந்த காலத்திலேயே இந்த வழக்கு நடவடிக்கைகளை வாதிக்கு நான் சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. புஸ்பவள்ளி என்பவர் அசல் வழக்கு எண். 31/2010ல் 12ம்

பிரதிவாதியாக உள்ளார். புஸ்பவள்ளி வாதிக்கு கிரையம் கொடுத்தது அசல் வழக்கு எண். 31/2010 வழக்கு பின்னிட்டுத்தான் என்றால் சரிதான். வாதி ஏற்கனவே கிரையம் பெற்ற நபர்கள் குறித்து 31/2010 ல் கட்டுப்படுத்தி தீர்ப்பு ஏற்பட்டுள்ளதால் அவர் செய்து கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண். 31/2010 விவரங்களை ஏற்கனவே நானும் புஸ்பவள்ளியும் வாதிக்கு சொல்லிவிட்டோம் என்றும், அது தெரிந்தே அவர்கள் அந்த வழக்கில் தன்னை கட்சிகாரர்களாக சேர்த்து வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 31/2010 ன் தீர்ப்பின் படி இந்த வழக்கின் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் OS No. 31/2010 ல்தாக்கல் செய்துள்ள பிராதினை நான் பிரதிவாதி என்ற அடிப்படையில் நான் அதை படித்து பார்க்கவில்லை. 1952 ல் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரத்தையும் நான் படித்து பார்க்கவில்லை. பின்னிட்டு சாட்சி 1952 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை படித்து பார்த்ததாக கூறுகிறார். அந்த பத்திரத்தில் இராமநாடாருக்கு உண்டான சொத்தை நீக்கித்தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக வாசகம் கண்டுள்ளது என்றால் சரியல்ல.

1952 ம் வருட பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்திற்குண்டான நான்குமாலில் இராமநாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து காட்டப்பட்டிருந்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நான் இந்த சொத்தினை கிரையம் கொடுக்கும் பொழுது பவர் ஏஜெண்ட்டாக இருந்து கொடுக்கும் பொழுது சொத்தின் வில்லங்க சான்றிதழ் பார்வையிட்டுத்தான் வாதிக்கு கிரையம் கொடுத்தேன். அந்த வில்லங்க சான்றிதழ் வாதியின் வசம் உள்ளது. அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் 1952 ம் வருடத்திற்குண்டான பதிவு இருக்கும் என்பதால்தான் நாங்கள் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

1952ம் வருடத்தில் ஏற்பட்ட பாகப்பத்திரத்தில் காட்டியுள்ள சொத்தை குறித்து 80 வருடம் கழித்து அந்த பாகப்பிரிவினை செல்லாது என்று நாங்கள் கட்சி செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எந்த வித முன்னெச்சரிக்கையும் இல்லாமலும், ஆவணங்களை பார்வையிடாமலும் நான் பவர் ஏஜெண்ட்டாக இருந்து, வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதால் வாதியும் நானும் நல்லெண்ண கிரையதாரர்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில்தான் இராமநாடார் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .